**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S No. 56 of 2022

Deposition of P.W.1

Name of the Witness: திரு.மகாலிங்கம்

Date : 24.09.2025

***2 முதல் 7, 11 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை***

நான் சாமிசெட்டிப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் ரியல் எஸ்டேட் தொழிலும் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் பிரதிவாதிகளை எனக்கு தெரியும். அவர்களின் குடும்ப விவரங்கள் எனக்கு தெரியும். ராமசாமிக்கு சொத்துக்கள் எப்படி பாத்தியம் என்று எனக்கு தெரியாது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்திலும் ராமசாமிக்கு சொத்துக்கள் எப்படி பாத்தியம் என்று தெரியாது என்று தான் சொல்லியுள்ளேன். நான், ராமசாமி, பிரதிவாதிகள் உறவினர்கள் என்றாலும், அதை விவரங்களும் தெரிந்து கொண்டு தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2) ராமசாமிக்கும், தருமபுரியை சேர்ந்த பாலு செட்டியார் மகன் பி.நாராயணனுக்கும் கொடுக்கல், வாங்கல் உள்ள விவரம் எனக்கு தெரியாது. நாராயணன், ராமசாமி மற்றும் பிரதிவாதிகளுக்கு இடையே உள்ள கொடுக்கல், வாங்கல் மற்றும் இதர பிரச்சனைகள் தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இதே போல் என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நாராயணன், ராமசாமி, நாகராஜ் குடும்பத்தில் உள்ள கொடுக்கல், வாங்கல், நிலம் சம்பந்தமாக

பிரச்சனை இருப்பது எனக்கு தெரியும் என்றாலும், பொய்யாக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. ராமசாமி மற்றும் அவரது மகன்களான மணி, நாகராஜ், தேவகி, சிந்தாமணி, ராணி இவர்களிடையே பாக பிரிவினை ஏற்பட்டதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்கள் என்றாலும், அவர்களுக்குள் பாகபிரிவினையே ஏற்படவில்லை என்றால் எனக்கு தெரியாது.

3) நான் 31.12.2021ல் சொத்தை வாங்கினேன். சொத்தை வாங்குவதற்கு முன்பாக சொத்தில் வில்லங்கம் உள்ளதா என்று பார்த்தீர்களா என்றால் வில்லங்கம் இல்லை என்று பார்த்து தான் வாங்கினேன். வில்லங்க சான்றிதழில் நாகராசன் கூட்டுறவு சங்கத்தில் செலுத்த வேண்டிய கடனுக்காக சொத்து பற்றுகை செய்யப்பட்டுள்ள விவரம் வில்லங்க சான்றிதழில் பதிவாகியுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. சொத்துக்களின் முன் பாத்தியஸ்தர்களின் உரிமை ஆவணத்தை நான் பார்த்தேனா என்றால் நான் பார்த்தேன். நாராயணன் வாங்கிய சொத்தின் ஆவணத்தை பார்த்தேன், அதில் அவர் எந்த தேதியில் வாங்கியிருக்கிறார் என்று பார்த்தேன். 1994ல் வாங்கியிருக்கிறார், தேதி தெரியாது, கிரையத் தொகை எவ்வளவு என்று தெரியாது. நான் வில்லங்க சான்றிதழ் வாங்கி பார்த்திருந்தால் எல்லா விவரமும் தெரிந்திருக்கும் என்றாலும், நான் வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4) நிலத்தை நாராயணன் மற்றும் தேவகி வகையறா சுவாதீனத்தில் இருந்து கொண்டு பிரச்சனை இருந்ததால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. நாராயணன் பணத்தை திரும்ப

கொடுத்து விட்டால் மறு கிரையம் செய்து கொடுப்பதாக தான் ஆவணம் எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் அதே ஊர்காரர் என்பதால் எல்லா விவரங்களையும் தெரிந்து கொண்டு தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. தேவகி மற்றும் துரைசாமி மீதும் அவர்கள் வைக்கோல் போருக்கு தீ வைத்ததாக நாராயணன் தொடர்ந்த குற்றவியல் வழக்கு தள்ளுபடியான விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் அதே கிராமத்தில் வசித்து இருப்பதால் அனைத்து விவரங்களையும் தெரிந்து கொண்டே தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) இந்த நிலம் இல்லாமல் மற்ற இடத்திலும் நிலம் வாங்கி விற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதால் நிறைய நிலங்கள் வாங்கி விற்றிருக்கிறேன் என்றால் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கூட்டு குடும்ப சொத்தை பாகம் பிரிக்காமல் ஒரு பாகஸ்தர் மட்டும் சொத்தை விற்க முடியாது என்ற விவரம் எனக்கு தெரியும். தற்போது பெண்களுக்கும் சொத்தில் சமஉரிமையுண்டு என்ற விவரம் எனக்கு தெரியும். 1993ல் நாராயணன் கேட்டு கொண்டதன் பேரில் ராஜேந்திரன் என்பவர் பெயரில் சுமார் 10 ஏக்கர் நிலம் ரூபாய் 3 லட்சத்திற்கு அடமானம் வைக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் வில்லங்க சான்று போட்டு பார்த்ததில் இந்த விவரம் வரவில்லை.

(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)